004

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (இயற்கை விஞ்ஞானம்) - 2022/2023

**STU5415/STU6315 – கல்வி முகாமைத்துவம்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 15.11.2023

நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இன் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இன் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## பகுதி – I

1. 'முகாமைத்துவம்' எனும் பதத்தினை விளக்குக.
2. விளைதிறன்மிக்க பாடசாலையொன்றின் பண்புகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.
3. நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய எண்ணக்கருக்களை வேறுபடுத்துக.
4. ஆசிரியர் ஒருவரின் "வாண்மைசார் வகைக்கூறலின்" முக்கியத்துவத்தினை விளக்குக.
5. இலங்கை கல்வி முகாமைத்துவத்தின் முகாமைத்துவ ஒழுங்கமைப்புக் கட்டமைப்பினை வரைக.
6. பாடசாலை அதிபர் ஒருவரின் போதனா தலைமைத்துவத்தினை விளக்குக.
7. குறிக்கோள் மைய முகாமைத்துவம் என்பதனால் கருதவது யாதென விபரிக்குக.
8. முகாமைத்துவத்தின் செயன்முறையின் நான்கு கட்டங்களை பாடசாலை ஒன்றுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

**(5 x 8 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** IAB பாடசலையொன்றின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பினை வரைக.

**(04 புள்ளிகள்)**

**ii.** IAB பாடசாலையொன்றின் அதிபருடைய வகிபாகத்தினை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** மேலே நீங்கள் முன்வைத்த ஒழுங்கமைப்பு கட்டமைப்பானது பாடசாலை அதிபர் தனது தலைமைத்துவ வகிபாகத்தினை நிறைவேற்றுவதற்கு எவ்வாறு உதவும் என கலந்துரையாடுக. **(08 புள்ளிகள்)**

10.

**i.** இலங்கையின் கல்வி முறைமையின் அதிகார பரவலாக்கம் தொடர்பில் 1987 இன் 13ஆவது திருத்தத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் நான்கினைக் (04) குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

**ii.** மேலே குறிப்பிட்ட மாற்றங்களின் மூலம் நாட்டின் கல்வி முறைமை எதிர்பார்க்கும் உடன்பாடான விளைவுகள் யாவை? அதற்கான காரணங்களையும் குறிப்பிடுக. **(08 புள்ளிகள்)**

iii. நாட்டின் இன்றைய கல்வி முறைமை மற்றும் அபிவிருத்தியில் அவை எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதை மூன்று (03) காரணங்களின் துணையுடன் விளக்குக. **(08 புள்ளிகள்)**

11.

i. வகுப்பறை முகாமைத்துவம் எனும் பதத்தினால் கருதப்படுவது யாது?

**(04 புள்ளிகள்)**

ii. ஆசிரியர் ஒருவர் என்ற வகையில் உங்களுடைய வகுப்பறையினை முகாமைத்துவம் செய்யும் போது நீங்கள் கவனத்திற் கொள்ளும் மூன்று (03) காரணிகளை விளக்குக. **(08 புள்ளிகள்)**

iii. மேலே குறிப்பிட்ட காரணிகள் உங்களுடைய கற்பித்தலுக்கு எவ்வாறு வசதி செய்யும் என மூன்று (03) உதாரணங்களின் துணையுடன் கலந்துரையாடுக. **(08 புள்ளிகள்)**

12.

i. ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணத்தின் துணையுடன் "மேற்பார்வை" என்பதனால் கருதப்படுவது யாதென விளக்குக.

**(04 புள்ளிகள்)**

ii. பாடசாலை அதிபரின் மேற்பார்வைசார் வகிப்பாகத்தினை மூன்று (03) உதாரணங்களின் துணையுடன் பரிசீலிக்குக.

**(08 புள்ளிகள்)**

iii. அதிபரின் மேற்பார்வைசார் வகிபாகம் எவ்வாறு பாடசாலையின் முன்னேற்றத்திற்கு வசதி செய்யும் என மூன்று (03) உதாரணங்களின் துணையுடன் கலந்துரையாடுக. **(08 புள்ளிகள்)**

13.

i. கல்வி முகாமையாளர்கள் யார்?

**(04 புள்ளிகள்)**

ii. கல்வித்துறைசார் முகாமையாளர்களை பயிற்றுவிப்பதால் கல்வி முறைமை அடைந்து கொள்ளக்கூடிய நன்மைகள் நான்கினைக் (04) கலந்துரையாடுக. **(08 புள்ளிகள்)**

iii. கல்வித்துறைசார் முகாமையாளர்களுக்கு பயிற்சியளிக்கும் போது முகங்கொடுக்கக்கூடிய பிரச்சினைகள் இரண்டினையும் (02) அவற்றுக்கு முகங்கொடுப்பதற்கான ஆலோசனைகளையும் முன்வைக்குக.

**(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -